[1992 மார்ச் 26

ஆகிய நன்நாட்களில் இனிப்பு வழங்குவதைப்போல, தங்கத் தலைவி அவர்களுடைய ஆட்சியில் புரட்சித் தலைவர் அவர் களின் பிறந்த நாளன்றும், தமிழகத்தினுடைய தங்கத் தலைவி தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பிறந்தநாளன்றும் இனிப்பு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆரம்பித்த இந்த சத்துணவுத் திட்டத்தை மிகச் செம்மையோடும் சீரோடும், சிறப்போடும் நடத்த வேண்டு மென்று இன்றையதினம் அதற்கு அரிய அறிவுரைகளை வழங்கி வருகிற மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பிறந்த நாளன்று இனிப்புகள் வழங்கு வதற்கு நிச்சயமாக இந்த இலாகா பரிசீலனை செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 374 திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

374—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை வசதி.

* 4290—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிரா விடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கல்லுக்கட்டு—பைத்தூர், கல்லுக்கட்டு—கீரிப்பட்டி வரை சாலை வசதி ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்கட்டிலிருந்து பைத்தூருக்கும், கீரிப்பட்டிக்கும் இதுவரை அறவே சாலை வசதி இல்லாததால் கல்லுக்கட்டு குருவும் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மலைவாழ் மக்களும், அவர்களுடைய 30-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளும், பிரசவத்திற்காக கொண்டு செல்லப்படும் தாய்மார்களும்

[1992 மார்ச் 26]

2 கிலோமீட்டர் ஆற்றோடையில் மணலில்தான் இதுவரையிலும் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய நலனுக்காக, குறிப்பாக, பிரசவத்திற்காக செல்லும் தாய்மார்களுடைய நலனுக்காக நம்முடைய தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மீண்டும் சாலை ஏற்படுத்த பரிசீலனை செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்கட்டு -பைத்தூர், கல்லுக்கட்டு-கீரிப்பட்டி வரை செல்லும் சாலைகளானது, சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏற்காடு மலை, கல்ராயன் மலை மற்றும் அறநூற்கு மலைப் பகுதிகளில் அமையாத காரணத்தால், இப்பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது. ஆனால் ஆத்தூர் ஒன்றியத்தின் மூலமாக வேறு திட்டத்தின் மூலமாக இதைப் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10,45

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தாய் உள்ளம் கொண்ட தங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஆத்தூரில் நீண்டநாள் மக்கள் தேவையான கால்நடை டிஸ்பென்சரியை அப்-கிரேட் செய்து கொடுத்துள்ள நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான பாதங்களில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல 13 லட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்காக விடுதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் அவர்களுடைய பொன்னான பாதங்களில் நன்றி கூறி, இந்தச் சாலை உள்ளாட்சித்துறை மூலமாவது அல்லது பொதுப்பணித் துறை மூலமாவது அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாடசித்துறை, பொதுப்பணித்துறை, அமைச்சர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தால் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 375, திரு. வெ. நடேசன் பால்ராஜ்—இருக்கையில் இல்லை.

வினா எண். 376, டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு கைத்தறி தொழில் துறை அமைச்சர்.